பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 10 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** சுற்றுலாத் துறையில் இந்தியாவின் வளர்ச்சி உள்ளூர் வேலைவாய்ப்புகளை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** வெள்ளப்பெருக்கை தடுக்க நீர் மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி கேட்டுக்கொண்டுள்ளார்.

**3.** விநியோகஸ்தர்களுக்கான சர்க்கரை கையிருப்பு வரம்பு ஆயிரம் குவிண்டாலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**4.** **Fly Dubai** விமானத்தின் விமானியை துணை விமானி தாக்கியது தொடர்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அரசு தலைமை வழக்கறிஞர் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

**5.** ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று 2 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

சுற்றுலாத் துறையில் இந்தியாவின் வளர்ச்சி உள்ளூர் வேலைவாய்ப்புகளை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய சுற்றுலா அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத்தின் கட்டுரையை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், உலக அளவில் இந்தியா சிறந்த சுற்றுலா தளமாக விளங்குவதாக கூறியுள்ளார்.

நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை பொருளாதார வாய்ப்பாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

வெள்ளப்பெருக்கை தடுக்க நீர் மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி கேட்டுக்கொண்டுள்ளார்.

பீகார் தலைநகர் பாட்னாவில் முதலீடு உச்சிமாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், அம்மாநிலத்தில் மழை வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

ஆற்றின் கரையோரப்பகுதிகளை பலப்படுத்தவும், நீர் மேலாண்மைக்கும் ஆற்றுக்கரையோர சுவர் கட்டுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மழை வெள்ளத்தை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு நிதின்கட்கரி வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

விநியோகஸ்தர்களுக்கான சர்க்கரை கையிருப்பு வரம்பு ஆயிரம் குவிண்டாலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வரும் 15-ஆம் தேதியிலிருந்து, நவம்பர் 30-ஆம் தேதிவரை இது அமலில் இருக்கும் என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் கூறியுள்ளது.

மேலும், சர்க்கரை இருப்பு வைக்கும் காலஅளவு 15 நாட்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்க்கரையை பதுக்கிவைப்பதை தடுக்கும் வகையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

மாற்றியமைக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் அடிப்படையில் கொல்கத்தா பகுதியில் சர்க்கரை இருப்பு வரம்பு இரண்டாயிரம் குவிண்டாலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்குவங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கு தேவையான சர்க்கரையை உத்தரப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, கர்நாடகாவிலிருந்து கொண்டுவரப்படுவதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சேமிப்புத் தொகையில் கூடுதல் பங்கை ஓய்வூதியத்திற்காக மக்கள் ஒதுக்க வேண்டும் என்று தலைமை பொருளாதார ஆலோசகர் திரு அனந்த நாகேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய ஓய்வூதிய தினம் தொடர்பாக புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், இதற்காக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பல்வேறு முதலீடுகளில் ஈடுபடும் மக்கள் ஓய்வூதிய சேமிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்த முன்னுரிமை அளித்து வருவதாகவும் திரு அனந்த நாகேஸ்வரன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ரத்த தானம் செய்வது நமது ஒவ்வொருவரின் கடமை என்று நித்தி ஆயோக் உறுப்பினர் டாக்டர் சீனிவாஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய தன்னார்வ ரத்ததான தினத்தையொட்டி, புதுதில்லியில் உள்ள மருத்துவக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், தன்னார்வ ரத்த தானம் மூலம் **75** சதவீதம் ரத்தம் சேமிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

ரத்ததான தன்னார்வ அமைப்புகளின் பங்கை அவர் பாராட்டினார்.

மத்திய சுகாதார குடும்பநல அமைச்சகம் சார்பில், நாடு முழுவதும் இன்று ரத்ததான முகாம்கள் நடைபெற்றன.

இதனிடையே, தகுதியுடைய அனைவரும் ரத்த தானம் செய்ய முன்வர வேண்டும் என்று சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் இணைப்பேராசிரியர் டாக்டர் சுகந்தி செல்வராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — சுகந்தி செல்வராஜ் - 39 Sec. )***

<<<<<<>>>>>>

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, **25** ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்து இருக்கும் நிலையில்,

அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது தேசிய போர் நினைவிடம் மற்றும் தேசிய காவல் நினைவிடம் குறித்த தகவல்கள்.

*(Sound Byte —Voice - 81 Sec. )*

<<<<<<>>>>>>

துபாயிலிருந்து இஸ்ரேலின் டெல் அவிவ்-வுக்கு சென்று கொண்டிருந்த **Fly Dubai** விமானத்தின் விமானியை துணை விமானி தாக்கியது தொடர்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசு தலைமை வழக்கறிஞர் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துக்கு தீவிரவாத தொடர்பு இருக்கிறதா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ள அவர் விசாரணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பதிவு செய்யப்பட்ட விமானம் என்பதால், இந்த சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ள அந்நாட்டு அரசுக்கு அதிகாரம் இருப்பதாக எமிரேட்ஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

**Fly Dubai** விமானத்தில் இந்திய விமானி **Smit Machar** மீது துணை விமானி நடத்திய தாக்குதல் விமானக் கடத்தல் முயற்சி என்று இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் பிரதமரின் செய்தித் தொடர்பாளர் டேவிட் மென்சர், அமெரிக்காவில் விமானத்தை கடத்தி சென்று நடத்தப்பட்ட தீவிரவாத செயலுக்கு இணையாக இந்த முயற்சி இருப்பதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஓமன் நாட்டைச் சேர்ந்த துணை விமானியை ஐக்கிய அரபு எமிரேட் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுவருவதாக அவர் கூறினார்.

இஸ்ரேல் — ஐக்கிய அரபு எமிரேட் இடையேயான விமான சேவை ஆறு நாட்களுக்கு ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று **2** வெள்ளி, **3** வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளில் ஆடவர் மல்யுத்த 97 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Nitesh Siwach வெள்ளிப்பதக்கம் வென்றார்.

பாயமரப்படகு பந்தயத்தில் Manu Francis — Kurisinkal Noble இணை வெள்ளிப்பதக்கத்தை வென்றது.

ஸ்குவாஷ் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவிலும், வில்வித்தை ஆடவர் தனிநபர் பிரிவிலும் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

ஆடவர் ஹாக்கிப்பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

ஆடவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 124 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்றது.

இப்போட்டிகளில் இந்தியா இதுவரை 10 தங்கம், 23 வெள்ளி, 32 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 8-ஆவது இடத்தில் உள்ளது.

----------

சீன **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று முதல் ஆட்டத்தில் இந்தியாவின் **Harmeet Desai, Yashaswini Ghorpade, Sydrela Das, Divyanshi Bhowmick** ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

------------------

மொஹாலியில் நடைபெற்ற ஆஸ்திரேலியா ''ஏ'' அணிக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் **281** ரன் வித்தியாசத்தில் இந்தியா ''ஏ'' அணி வெற்றிபெற்றது.

------------------

ஆஸ்திரேலியா ''ஏ'' அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா ''ஏ'' அணி இரண்டாவது இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு **28** ரன் எடுத்துள்ளது.

புதுச்சேரியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா ''ஏ'' அணி வெற்றிபெற மேலும் **337** ரன் எடுக்க வேண்டும்.

ஆஸ்திரேலியா ''ஏ'' அணி முதல் இன்னிங்சில் **358** ரன்னுக்கு ஆட்டமிழந்தது. இரண்டாவது இன்னிங்சில் **4** விக்கெட் இழப்பிற்கு **173** ரன் எடுத்து டிக்ளேர் செய்தது.

இந்தியா ஏ'' அணி முதல் இன்னிங்சில் **167** ரன்னுக்கு ஆட்டமிழந்தது

**<<<<<<END>>>>>>**